## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

O.S.No.52/2022

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | வாசா.2 |
| பெயர் | : | கலா |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சின்னையா |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ம் நாள் வெள்ளிக்கிழமை 1872ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்சு கிளார்க் திரு.ரா.நாகநாதன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் 2–ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக நிரூபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தற்போது சிவகங்கையில் இருக்கிறேன். எனக்கு சொந்த ஊர் கிளியூர். தாவா வழக்கின் 1வது சாட்சி என் கணவர் என்றால் சரிதான். தாவா வழக்கின் பிரதிவாதிகளை எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கான விபரங்களை யார் கூறியது

என்றால் நான்தான் கூறினேன். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் கிளியூரில் உள்ளது. கிளியூர் கிராமம் எந்த குரூப்பில் உள்ளது என்றால் கற்களத்தூர் குரூப்பில் உள்ளது. தாவா சொத்தின் பட்டா நம்பர் 157 ஆகும். சர்வே எண் 356 /3ஆகும். தாவாசொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 36 சென்டிமீட்டர் ஆகும். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து அவருக்கு எப்படி பார்த்தீர்கள் என்றால் அது அவரது அப்பாவின் சொத்து ஆகும். நான் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். என் மாமனார் பெயர் சிவத்தியான்.

2. என் மாமனாருக்கு எத்தனை வாரிசு என்றால் ஒரே வாரிசு எனது கணவர் மட்டும் தான். எனது மாமனார் எப்பொழுது இறந்தார் என்றால் 2007 ஆம் ஆண்டு இறந்தார். எனது மாமனார் என்னை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்டார் என்று நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது சரியா தவறா என்றால் சரிதான். எனது மாமனாரின் இறப்பை நாங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல பதிவு செய்து எல்லாம் பெற்று விட்டோம். நான் தொழில் நிமித்தமாக சிவகங்கையில் இருந்தாலும் எங்களது சொந்த ஊருக்கு வந்து போய்க் கொண்டு தான் உள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது என்ன நிலையில் உள்ளது என்றால் அதிலிருந்த கூரை வீடு இடிந்து உள்ளது. எனக்கு இதற்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் இருந்துள்ளதா என்றால் எனக்கு எப்பொழுதும் உடல்நிலை சரியில்லாமல் தான் இருக்கும்.

3. எனக்கு மூலநோய் பாதிப்பு இருந்ததா என்றால் இல்லை இதய துடிப்பு அதிகமாக இருக்கும். நான் எனது மூலநோய்க்கான அறுவை சிகிச்சை காரணமாக பிரதிவாதிகளிடம் கடன் வாங்கினேன் என்றால் பிரதிவாதியிடம்

கடன் வாங்கினேன். ஆனால் குடும்ப செலவிற்காக வாங்கினேன். நான் எவ்வளவு கடன் வாங்கினேன் என்றால் நாங்கள் 15,000/- கேட்டோம் அவர் 10000/- ரூபாய் கொடுத்தார். நான் மேற்படி கடனை எப்போது பெற்றேன் என்றால் 2018 ஆம் வருடம் 9வது மாதம் கடன் பெற்றோம் தேதி நினைவில் இல்லை. மேற்படி கடமை பெற்றதற்காக நாங்கள் ஆதரவு ஏதும் எழுதிக் கொடுத்தோமோ என்றால் வெறும் இருபது ரூபாய் பத்திரம் கொடுத்தார்கள் அதில் நானும் எனது கணவரும் கையொப்பம் செய்தோம். மேற்படி பத்திரத்தில் நாங்கள் எங்கு வைத்து கையெழுத்து செய்தோம் என்றால் சிவகங்கையில் உள்ள எங்களது வீட்டில் வைத்து கையெழுத்து செய்தோம், மேற்படி கடனை எங்களுக்கு இளங்கோ தான் ஏற்பாடு செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல.

4. மேற்படி இளங்கோவை எங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பத்திரத்தில் நாங்கள் கையெழுத்து செய்யும்போது யாரெல்லாம் இருந்தோம் என்றால் நான் எனது கணவர் மற்றும் பிரதிவாதி ஆகியோர் இருந்தோம். மேற்படி கடன் பெறும்பொழுது இளங்கோ இருந்ததாக என் கணவர் சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல. இளங்கோ அங்கு இல்லை. நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். பொதுவாக வெற்று பத்திரத்தில் யாரும் கையெழுத்து செய்து கொடுக்க மாட்டார்கள் என்றால் எங்கள் சூழ்நிலை அன்று அவ்வாறு இருந்தது அதனால் கையெழுத்து செய்தோம் என்ன சூழ்நிலை இருந்தது என்றால் உடல்நிலை சரியில்லாமல் இருந்தது குடும்பத்தில் பிரச்சனை இருந்தது அதனால் கையெழுத்து செய்தோம். நாங்கள் பணம் பெற்ற பிறகு எங்களது சொத்து இருக்கும் இடத்திற்கு அருகில் திருச்சி ராமேஸ்வரம் நெடுஞ்சாலை ரோடு வந்துள்ளது என்றால் ரோடு வந்துள்ளது சரிதான். நாங்கள் வெற்று பத்திரத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றும் எழுதப்பட்ட

புத்தகத்தில் தான் கையெழுத்து செய்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் எழுதப்பட்ட பத்திரத்தில் தான் கையெழுத்து செய்தோம் என்பதற்கான ஆதாரங்களை காட்டினால் நான் ஒத்துக் கொள்ள தயாராக உள்ளேன் என்றால் உள்ளேன்.

5. எனக்கு மொத்தம் மூன்று பிள்ளைகள் ஒரு பெண் பிள்ளை மற்றும் இரண்டு ஆண் பிள்ளை. மேற்படி கடன் பெறும்போது நாங்கள் வேறு எதுவும் ஆதரவாக கொடுத்தோமோ என்றால் பட்டா மட்டும்தான் ஆதரவாக கொடுத்தோம். நாங்கள் கடன் பெற்று தொகையை எவ்வளவு வட்டிக்கு கடன் வாங்கினோம் என்றால் ஒரு ரூபாய் வட்டிக்கு வாங்கினோம் எத்தனை சதவீதம் வட்டி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் கடனை திரும்ப செலுத்துவதாக பிரதிவாதிகளிடம் கூறினோமா என்றால் கூறினோம். நாங்கள் பணத்தை கொடுத்து விட்டு பட்டாவை திரும்ப பெறுவதாக கூறி தான் கடன் பெற்றோம். நான் கடனை திருப்பி செலுத்துவதற்காக அவரது வீட்டிற்கு செல்லும் போது அவர் வீட்டில் இல்லை வெளியூர் சென்று விட்டதாக சொன்னார்கள் அதனால் கடனை திரும்ப செலுத்தாமல் வந்து விட்டோம். நான் மூலநோய் அறுவை சிகிச்சைக்காக அவசரமாக கடன் பெறுவதாக பணம் பெற்றுவிட்டு பின்னர் பத்திரம் பகிர்ந்து தருவதாக கூறினேன் என்றால் சரியல்ல. நான் குடும்ப செலவுக்காக தான் கடன் பெற்றேன். எனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கடன் பெற்றதாக என் கணவர் சாட்சியளித்துள்ளார் என்றால் அவர் அவ்வாறு கூறியிருக்க மாட்டார்.அவர் அவ்வாறு சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

6. நாங்கள் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தினோமா என்றால் அது என் கணவரை கேட்டால் தான் தெரியும் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவாசொத்திற்கு கிழக்கே யாருடைய இடம் உள்ளது என்றால்

பிச்சைமுத்துவின் இடம் உள்ளது. மேற்படி பிச்சைமுத்துவின் மனைவிதான் ஜெயா. தாவாசொத்திற்கு மேற்கே யாருடைய இடம் உள்ளது என்றால் பிரதிவாதியின் வீடு உள்ளது. தாவாசொத்திற்கு தெற்கே யாருடைய இடம் உள்ளது என்றால் எனக்கு திசை சரியாக தெரியவில்லை..நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதிகள் மோசடியாக பத்திரம் ஏற்படுத்தி உள்ளதாக எனக்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் மேற்படி தகவலை எனக்கு யார் கூறியது என்றால் யார் கூறியது என்று எனக்கு நினைவில் இல்லை நான் ஊருக்கு வந்து சென்று கொண்டிருப்பதால் அதைப் பற்றி எனக்கு தெரியவந்தது.

7. நாங்கள் கடன் பெறும்போது மேற்படி பத்திரத்தை தவிர வேறு எந்த ஆவணத்திலும் கையெழுத்து போட்டோமோ என்றால் இரு முறை கையெழுத்து செய்தோம். அதை தவிர வேறு ஏதும் கையெழுத்து செய்யவில்லை. நாங்கள் கையெழுத்து செய்த பத்திரத்தை திரும்பத் தருமாறு பிரதிவாதியிடம் கேட்டோமா என்றால் கேட்டோம் அவர் அதற்கு காசை கொடுத்துவிட்டு பட்டாவை வாங்கிக் கொள்ளுமாறு சொன்னார் நாங்கள் பணம் எடுத்துச் செல்லும் போது அவர் வீட்டில் இல்லாததால் நான் திரும்ப வந்துவிட்டேன். அதன் பிறகு நான் அங்கு செல்லவில்லை.நாங்கள் பிரதிவாதியிடம் பட்டாவை தருமாறு கேட்டோம் ஆனால் அவர் பதில் சொல்லவில்லை. அதன் பின்பு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் நீதிமன்றத்திற்கு வந்தோம். தாவா சொத்து பிச்சைமுத்து ஜெயா ஆகியோரின் வீட்டிற்கு அருகில் உள்ளதால் அவர்களின் புழக்கத்திற்கு வசதியாக இருக்கும் என்றால் தாவா சொத்து இருவரின் வீட்டிற்கும் இடையே தான் உள்ளது.

8. தாவா சொத்து இருக்கு அருகே திருச்சி ராமநாதபுரம் நெடுஞ்சாலை வந்த பிறகு மேற்படி சொத்தின் விலை ஏறிவிட்டதால் பிச்சைமுத்து ஜெயா ஆகியோர் கேட்கும் பொழுது நாங்கள் கொடுக்க மறுத்து விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. பணம் வாங்கிய அன்றே பதிவு பத்திரம் செய்து கொடுக்குமாறு பிரதிவாதி கேட்டார் என்றும் நாங்கள் அவசரத்தில் பணம் பெற்றுக் கொண்டு மருத்துவமனை செல்ல வேண்டி இருந்ததால் பிறகு பதிவு பத்திரம் பதிவுசெய்து தருவதாக குறிப்பிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பணத்தையும் திரும்ப கொடுக்காமல் இடத்தையும் கொடுக்காமல் பிரதிவாதிகளை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா சொத்தை கொடுக்க மறுத்து வருகிறோம் என்றும் மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. எனது மகனும். தாவா சொத்து அதிக விலைக்கு போகும் என்றும் பிரதிவாதிகளுக்கு கொடுக்க வேண்டாம் என்றும் சொன்னார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.02.20 17:09:44 +0530